கவனிக்க .- 2026.02.27ஆந் திகதிய 2479ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2483- 2026 අප්‍රේල් මස 02 වැනි සිකුරාදා - 2026.04.02

2483ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (II ஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 568 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 570 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள் | 582 |
| அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 583 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, ஏப்பிறல் மாதம் 24ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, ஏப்பிறல் மாதம் 10ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ்.டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# ஆயவிற்பனையும் குத்தகையும்

## கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை 2026/ 2027

2026.07.01 ஆந் திகதி தொடக்கம் 2027.06.30 ஆந் திகதி வரை

### புத்தளம் பிரதேச செயலகப் பிரிவு

2026, யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2027, யூன் 30 ஆந் திகதி வரையுள்ள காலத்திற்கு 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய பின்வரும் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைக்காக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. சகல கேள்விப்பத்திரங்களும் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் அது உரிய முறையில் தயாரிக்கப்பட்ட படிவமாக இருந்தல் வேண்டும். மேலும், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய வைப்புத் தொகையினை செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும் விண்ணப்பிக்கும் தொகையில் குறைந்தபட்சம் 15% பெறுமதியுள்ள வருமான அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3.முறையாகத் தயாரிக்கப்பட்ட பத்திரங்கள் மெழுகிடப்பட்ட உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் “.................... இலக்க ......................... கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்” எனக் குறிப்பிடுதல் வேண்டும். கள்ளுத்தவறணை கேள்விப்பத்திரம் 2026.05.04 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக புத்தளம் பிரதேச செயலாளருக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் புத்தளம் பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியினுள் இட வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

5. 2026.05.04 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடன் எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கையாளர்கள் புத்தளம் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்யப்படாத கள்ளுத்தவறணையின் மீள விற்பனை 2026.06.01 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மறுபடியும் நடைபெறும். அன்றைய நாளும் விண்ணப்பங்கள் வர்த்தமானி அறிவித்தலின் படி அமைதல் வேண்டும்.

7. இது தொடர்பில் மேலதிக விபரங்களை புத்தளம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். (0322265358).

சுமுது பீ. விதானகே,
பிரதேச செயலாளர்,
புத்தளம்.

பிரதேச செயலகம்,
புத்தளம்,
2026.03.19.

**அட்டவணை**

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *கிராமம்* | *தவறணை திறக்கும் நேரம்* | *தவறணை மூடும் நேரம்* | *தவறணை கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும்* | *கேள்விப்பத்திர வைப்புப் பணம்* |
|---|---|---|---|---|---|
| புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவு | சேனைக்குடியிருப்பு | காலை 10.00 மணி | இரவு 9.00 மணி | 2026.05.04 மு.ப. 10.30 மணி | ரூ. 1,000.00 |

04- 62

## கள்ளுத்தவறணை குத்தகையும் விற்பனையும் - 2026/ 2027

## வென்னப்புவ பிரதேச செயலாளர் பிரிவு

2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2027 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்ட கள்ளுத்தவறணைகளில் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க கள்ளுத்தவணை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கமைவாக ஏற்றுக்கொள்ளப்படும்.

2. எந்த ஒரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமைப்படிவங்களில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3.கேள்விப்பத்திரங்கள் முறையாக முத்திரையிடப்பட்ட உறையில் இட்டு இடது பக்க மேல் மூலையில் பெயரும் இலக்கமும் பின்வருமாறு ...................... ஆம் இலக்க ..........................கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப் பத்திரம் எனக் குறிப்பிடல் வேண்டும். 2026.04.27 ஆந் திகதி தொடக்கம் 2026.05.11 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்பு வென்னப்புவ பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப் பத்திரப்பெட்டியில் இடுதல் அல்லது பதிவுத்தபால் மூலம் மேற்குறிப்பிட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்க கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கமைவாக இருத்தல் வேண்டும்.

5. 2026.05.11 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளுதல் முடிவடைந்த உடனே எல்லாக் கேள்விப் பத்திரங்களும் திறக்கப்படும். அந்நேரம் கேள்விப் பத்திர கோரிக்கையாளர்கள் அல்லது அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் வென்னப்புவ பிரதேச செயலகத்தில் சமுகமளித்து இருத்தல் வேண்டும்.

6. மேற் குறிப்பிட்ட திகதியில் இடம்பெறாத கள்ளுத்தவறணை விற்பனையானது 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மீண்டும் இடம்பெறுவதுடன் இதற்கான கேள்விப் பத்திரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி மேற்குறிப்பிட்டவாறு அமைதல் வேண்டும்.

7. இது தொடர்பாக மேலதிக விபரங்கள் வென்னப்புவ பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.(0323138640).

எச்.எம்.நதீஜா.ஹேரத்,
பிரதேச செயலாளர்,
வென்னப்புவ.

பிரதேச செயலகம்,
வென்னப்புவ.

**அட்டவணை**

| | *பிரிவு* | *கிராமம்* | *கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதி திகதியும் நேரமும்* | *கேள்விப்பத்திர வைப்புத் தொகை* |
|---|---|---|---|---|
| 01. | வென்னப்புவ பிரதேச சபை | தம்பரவில. | 2026.05.11 மு.ப. 10.30 மணிக்கு | 500.00 |
| 02. | | நஞ்சுண்டான்கரை | | 250.00 |
| 03. | | வாய்க்கால் | | 1000.00 |
| 04. | | பொரலஸ்ச | | 500.00 |
| 05. | | தும்மலதெனிய | | 1000.00 |
| 06. | | உள்ஹிட்டியாவ | | 500.00 |
| 07. | | லுனுவில | | 500.00 |
| 08. | | வென்னப்புவ | | 2000.00 |
| 09. | | நயினமடம | | 1000.00 |

தவறணை திறக்கப்படும் நேரம் - மு.ப.10.00
மூடப்படும் நேரம்- பி.ப. 9.00

04- 63

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
## 2026/ 2027 ஆம் ஆண்டிற்கான மதுபான சாலைகளின் குத்தகை உரிமத்திற்கான ஒப்பந்தப்புள்ளி

புத்தளம் மாவட்டம்- நாத்தாண்டிய பிரதேச செயலகம்
2026.07.01 முதல் 2027.06.30 வரை

2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2027, யூன் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள மதுபான சாலைகள் விற்பனை செய்வதற்கான விசேட தனிவுரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் இதன் மூலம் கோரப்படுகின்றன.

01. தற்போது நடைமுறையிலுள்ள அனைத்து உரிமங்களுக்கும் பொருந்தக்கூடிய பொதுவான நிபந்தனைகளுக்கு உட்பட்டு, 1982, ஓகத்து மாதம் 20ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு (சிலோன்) வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள மதுபான சாலைகள் குத்தகை உரிமத்திற்கான நிபந்தனைகள்.

02.ஒவ்வொரு ஒப்பந்தப்புள்ளியும் ஏதேனும் ஒரு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய நிர்ணயிக்கப்படட படிவத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அத்துடன் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிப் பெறுமதியில் குறைந்தபட்சம் 15 சதவீதத்திற்கு (15%) சமமான சொத்துரிமைச் சான்றிதழ் அதனுடன் இணைக்கப்பட வேண்டும்.

03. சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிப் படிவங்கள் முத்திரையிடப்பட்ட உறையிலிடப்பட்டு அவ்வுறையின் மேல் இடதுபுற மூலையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் மதுபானச்சாலையின் இலக்கம் மற்றும் பெயரை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தெளிவாகக் குறிப்பிட வேண்டும். உதாரணமாக "01 ஆம் இலக்க மூதுகடுவ மதுபான சாலைக்கான ஒப்பந்தப்புள்ளி"அல்லது " 02 ஆம் இலக்க கடுனேரிய மதுபான சாலைக்கான ஒப்பந்தப்புள்ளி" என எழுதி 2026.05.08 ஆந் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன்னர் நாத்தாண்டிய பிரதேச செயலகத்தில் உள்ள ஒப்பந்தப்புள்ளிப் பெட்டியில் இடப்பட வேண்டும் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

04. ஒப்பந்தப்புள்ளிகளைச் சமர்ப்பித்தல் 1982 , ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக குடியரசு (சிலோன்) வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள மதுபான குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய செயற்படல் வேண்டும்.

6. ஒப்பந்தப்புள்ளிகள் 2026.05.08 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது நிறுத்தப்பட்டவுடன் உடனடியாகத் திறக்கப்படும். அந்த நேரத்தில் அனைத்து ஒப்பந்தக்காரர்களும் (Tender Holders) நாத்தாண்டிய பிரதேச செயலகத்தில் சமுகமளித்திருக்க வேண்டும்.

7. இது தொடர்பாக மேலதிக விபரங்கள் நாத்தாண்டிய பிரதேச செயலகத்தில் பெற்றிக்கொள்ள முடியும்.(0322254486)

### அட்டவணை

| *இல.* | *வலயம்* | *ஊர்* | *குத்தகை விற்பனைத் தொகை* |
|---|---|---|---|
| 01. | நாத்தாண்டிய | மூதுகடுவ | ரூ. 1000.00 |
| 02. | நாத்தாண்டிய | கடுநேரிய | ரூ. 1000.00 |

பிரதேச செயலாளர்,
நாத்தாண்டிய.

பிரதேச செயலகம்,
நாத்தாண்டிய.

04- 20

## 2026 ஆம் ஆண்டு ஆடி மாதம் 01 ஆந் திகதி முதல் 2027 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை 2026/ 2027

### மஹவெவ பிரதேச செயலாளர் பிரிவு

2026 ஆம் ஆண்டு ஆடி மாதம் 01 ஆந் திகதி முதல் 2027ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் கள்ளு சில்லறை விற்பனைக்காக 1982 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 20 ஆந் திகதி இல. 207 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியான கள்ளு குத்தகை விற்கும் நிபந்தனைகளுக்கு அமைவாக கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடும் கள்ளு தவறணைக்களுக்கான கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

2. சகல கேள்விப்பத்திரங்களும் பிரதேச செயலாளர் அலுவலகமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் மாதிரி கேள்விப்பத்திரமொன்றில் தயார் செய்யப்பட வேண்டியுள்ளதுடன் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திர வைப்புப் பணம் வைப்பிலிட்டமைக்கான பற்றுச்சீட்டும் கேள்விப்பத்திரத்தில் குறிப்பிடப்பட வேண்டும். விலையில் 15% க்கு பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதி அத்தாட்சிப்பத்திரமும் இணைக்கப்படல் வேண்டும்.

3. முறையாக நிரப்பப்பட்ட சகல கேள்விப்பத்திரங்களும் சீல் வைக்கப்பட்டு அதன் இடது பக்க மூலையில் "இல .......... கள்ளுத் தவறணைகளுக்கான கேள்விப்பத்திரம் " என்று குறிப்பிட்டு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கள்ளுத்தவறணைக்கான பெயர் மற்றும் இலக்கத்தை குறிப்பிட்டு 2026.05.13 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்பதாக மஹவெவ பிரதேச செயலாளருக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அல்லாதவிடத்து அக்குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பதாக மஹவெவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியினுள் இடல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் முன்வைப்பதற்கு 1982.08.20 ஆந் திகதி வெளியிடப்பட்ட இல. 207 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட கள்ளு நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

5. 2026.05.13 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்ெகாள்ளும் காலம் முடிவடைந்ததும் கேள்விப்பத்திரங்கள் உடனே திறக்கப்படும் அச்சந்தர்ப்பத்தில் கேள்விப்பத்திரங்கள் முன்வைத்த அனைவரும் மஹவெவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இருக்க வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட திகதிக்கு விற்பனை செய்யப்படாத கள்ளுத்தவறணைகள் குத்தகை மீண்டும் விற்றல் 2026.06.10 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும். அத்திகதிக்கு கேள்விப்பத்திரங்கள் முன்வைப்பது மேற்குறிப்பிட்ட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

7. இது பற்றிய மேலதிக விபரங்களை மஹவெவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொ.இ.(0322254231, 0322252061).

மெனிக் சேனாநாயக்க,
பிரதேச செயலாளர்,(பதில் கடமை),
மஹவெவ.

பிரதேச செயலகம்,
மஹவெவ,
2026.03.20.

**அட்டவணை**

| *தவறணையின் இல.* | *கிராமம்* | *வைப்புப் பணம் ரூபா* |
|---|---|---|
| 16 | அடப்பரகம | ரூ. 500.00 |
| 17 | மட்டாகொடுவ | ரூ. 500.00 |
| 18 | தொடுவாவ - வடக்கு | ரூ.1000.00 |

04- 23

**2026 ஆம் ஆண்டு ஆடி மாதம் 01 ஆந் திகதி முதல் 2027 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளுத்தவறணைகள் குத்தகைக்கு விற்றல் -2026/ 2027**

**மாதம்பை பிரதேச செயலாளர் பிரிவு**

கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை - 2026 / 2027

2026 ஆம் ஆண்டு ஆடி மாதம் 01 ஆந் திகதி முதல் 2027 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் கள்ளு சில்லறை விற்பனைக்காக 1982 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியான கள்ளு குத்தகைக்கும் நிபந்தனைகளுக்கு அமைவாக கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்படும் கள்ளு தவறணைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

02. சகல கேள்விப்பத்தரங்களும் பிரதேச செயலாளர் அலுவலகமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடியள வகையில் மாதிரி கேள்விப்பத்திரமொன்றில் தயார் செய்யப்பட வேண்டியுள்ளதுடன் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திர வைப்புப் பணம் வைப்பிலிடப்பட்டமைக்கான பற்றுச்சீட்டும் குறிப்பிட்ட கேள்விப்பத்திரத்தில் குறிப்பிடப்பட வேண்டும். விலையில் 15% க்கு பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதி அத்தாட்சிப்பத்திரமும் இணைக்கப்படல் வேண்டும்.

03.முறையாக நிரப்பப்பட்ட சகல கேள்விப்பத்திரங்களும் சீல் வைக்கப்பட்டு அதன் இடது பக்க மூலையில் 13 பம்பல கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கள்ளுத் தவறணைகளுக்கான கேள்விப்பத்திரம் என்று பெயர் மற்றும் இலக்கத்தை குறிப்பிட்டு 2026.05.12 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்பதாக மாதம்பே பிரதேச செயலாளருக்குக் கிடைக்கக்கூடியதாய் பதிவு தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லாதவிடத்து அக்குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு முன்பதாக மஹவெவ பிரதேச செயலாளர் அலுவலகத்தல் உள்ள கேள்விப்பத்திர பெட்டியினுள் இடல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் முன்வைப்பதற்கு 1982 .08. 20 ஆந் திகதி வெளியிடப்பட்ட இல. 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட கள்ளுத்தவறணை நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

5. 2026.05.12 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் காலம் முடிவடைந்ததும் கேள்விப்பத்திரங்கள் உடனே திறக்கப்படும். அச்சந்தர்ப்பத்தில் கேள்விப்பத்திரங்களை முன்வைத்த அனைவரும் மாதம்பே பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இருக்க வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட திகதிக்கு விற்பனை செய்யப்படாத கள்ளுத் தவறணைகள் குத்தகை மீண்டும் விற்றல் 2026.06.09 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும். அத்திகதிக்கு கேள்விப்பத்திரங்கள் முன்வைப்பது உட்பட்டதாக இருக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட கள்ளு நிபந்தனைகளுக்கு.

07 இது பற்றிய மேலதிக விபரங்களை மாதம்பே பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
(தொ.இ. (0322247728).

லக்ஷிமா திமுத்து குமாரி,
பிரதேச செயலாளர்,
மாதம்பே.

பிரதேச செயலகம்,
மாதம்பே,
2026.03.26.

**அட்டவணை**

| *பிரிவு* | *கிராமம்* | *பார் இல.* | *கேள்விப்பத்திரங்கள் ஏற்கும் இறுதி நேரமும் திகதியும்* | *கேள்விப்பத்திர வைப்புத் தொகை (ரூபா)* |
|---|---|---|---|---|
| வடக்கு பிடிகல் பவளம் | பம்பல | 13 | 2026.05.12 காலை 10.30 மணிக்கு | 1000.00 |

04- 99

# உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்

## கம்பனியின் பெயர் மாற்றல் அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் ஐடியாஹப் லெப்ஸ் ( பீவீடீ) எல்டீடி என்ற தனது பெயரை ஐடியாஹப் பிரைம் ( பீவீடீ) எல்டீடி என மாற்றியுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

*கம்பனியின் முன்னையபெயர்:* ஐடியாஹப் லெப்ஸ் (பீவிடீ) எல்டீடி
*பதிவிலக்கம்:* PV 00357073
*பதிவு முகவரி:* 25/3, கனத்த வீதி, பொரலஸ்கமுவ
*கம்பனியின் புதியபெயர்:* ஐடியாஹப் பிரைம் (பீவிடீ) எல்டீடி
*நடைமுறைப்படுத்தல் திகதி:* 2026, மாச்சு 16

டிலொயிட் கோபரேட் சர்விசஸ்
(பிறைவெட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

100, பிரேபுரூக் பிளேஸ்,
கொழும்பு -02.

04- 01

---

## ஆதித்ய பிர்லா குளோபல் டிரேடிங் ( லங்கா) (பிவிடி) எல்டீடி ( PV 00246743)

இல.241எ, அம்பத்தலே வீதி, முல்லேரியா வடக்கு,
கொழும்பு, கொலன்னாவ

முன்னுரிமை பங்குகளின் மீள் பிரம்பல் குறித்த பொது அறிவிப்பு
( 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தின் பிரிவு 59(2) இன் படி)

ஆதித்யா பிர்லா குளோபல் டிரேடிங் (லங்கா) (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையானது, அதன் தனிப்பங்குதாரருக்குச் சொந்தமான நூற்று இருபத்தியொரு மில்லியன் எழுநூற்று தொண்ணூற்று ஆராயிரத்து ஐந்நூறு ரூபாய் (ரூ.121,796,500.00) கூட்டு மதிப்பைக் கொண்ட முந்நூற்று தொண்ணூற்று ஒன்று (391) 7% மீட்டத்தக்க முன்னுரிமைப் பங்குகளை (Redeemable Preference Shares) மீட்டெடுக்க முன்மொழிந்துள்ளது என்பதை இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றது.

இதன் விளைவாக , இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டு 60 நாட்கள் முடிவடைந்த பின்னர், நிறுவனத்தின் பங்குகள் 1,015,141 இலிருந்து 1,014,750 ஆகக் குறைக்கப்படுவதுடன் நிறுவனத்தின் குறிப்பிடப்பட்ட மூலதனம் (Stated Capital) ரூ.131,944,000 இலிருந்து ரூ.10,147,500 ஆகக் குறைக்கப்படும்.

இயக்குநர் சபையின் பணிப்புரையின் அடிப்படையில்,

கிரெஸ்டன் கோர்பரெட் சேர்விசஸ்
(பிவிடி) எல்டீடி,
நிறுவனச் செயலாளர்கள்.

04- 03

---

## 2007 இன் 07 ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தின் 241(4) (b) பிரிவு விதிமுறைகளின்படியான அறிவித்தல்

### Aditi (Private)Limited மற்றும் Aditi Infinity (Private) Limited இன் கூட்டிணைவு

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தின் 239 ஆம் பிரிவின் விதிகளின்படி Aditi (Private) Limited மற்றும் Aditi Infinity (Private) Limited இன் கூட்டிணைவு ஒன்றை செயற்படுத்துவதற்கு Aditi (Private) Limited ( நிறுவன பதிவு இல.PV 00268771) மற்றும் Aditi Infinity (Private) Limited (நிறுவன பதிவு இல.PV 94986) பணிப்பாளர் சபை தீர்க்கப்பட்டதோடு அதன்படி Aditi (Private) Limited மற்றும் Aditi Infinity (Private) Limited ஒரு நிறுவனமாக கூட்டிணைக்கப்பட்டதோடு Aditi Infinity (Private) Limited ஆக தொடர்ந்து இயங்கும்.

**சாதாரண வர்த்தக நேரங்களில் கடவத்தை, ரன்முத்துகல, கண்டி வீதி, இல. 459/1 இல்** Aditi (Private) Limited மற்றும் Aditi Infinity (Private) Limited இன் நிறுவனங்களின் கூட்டிணைவின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் எந்த ஒரு பங்குதாரர் அல்லது கூட்டிணைவு நிறுவனம் ஒன்றின் கடன் கொடுநர் அல்லது கடப்பாடு ஒன்றின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனம் ஒன்றுக்கான எந்த ஒரு நபருக்கும் பரீட்சிப்பதற்கு Aditi (Private) Limited மற்றும் Aditi Infinity (Private) Limited இன் பணிப்பாளர் சபை மூலம் நிறைவேற்றப்பட்ட கூட்டிணைவு முன்மொழிவின் பிரதிகள் கிடைக்கப்பெறும் பங்குதாரர் அல்லது கூட்டிணைவு நிறுவனம் ஒன்றின் கடன் கொடுநர் அல்லது கடப்பாடு ஒன்றின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனம் ஒன்றுக்கான எந்த ஒரு நபருக்கும் கூட்டிணைவு நிறுவனம் ஒன்றுக்கு மேற்கொள்ளப்படும் கூட்டிணைவு முன்மொழிவின் பிரதி ஒன்றை கட்டணம் இன்றி பெறுவதற்கு உரிமை உள்ளது.

நிறுவனச் சட்டத்தின் 244 ஆவது பிரிவின் விதிகளின்படி நிறுவன பதிவாளர் நாயகத்தின் மூலம் வழங்கப்படும் சான்றிதழின் திகதியில் இந்த கூட்டிணைவு அமுலுக்கு வரும்

பெத்மகே சுமுது நிலன்த பெரேரா,
நிறுவன செயலாளர்,
Aditi (Private) Limited மற்றும்
Aditi Infinity (Private) Limited.

இல.191/9,
சிறிமா பண்டாரநாயக்க மாவத்தை,
மஹர கடவத்த.

04- 35

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 34 ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் நாயகத்திடமிருந்து உரிமம் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, நிறுவனங்கள் சட்டத்தின் 34 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க "HAPPY SAPHIRS FOUNDATION" எனும் பெயரிலும் பாங்கிலும் நிறுவகம் ஒன்றினை உருவாக்குவதற்கும், அதன் பெயரின் இறுதியில் வரையறுக்கப்பட்டது என்ற சொல்லைச் சேர்க்காமல் வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் அதனைப் பதிவு செய்வதற்குக் கட்டளையிடுகின்றதுமான உரிமம் ஒன்றிற்காக கம்பனிகள் பதிவாளரிடம் விண்ணப்பம் ஒன்றானது செய்யப்பட்டுள்ளது.

தாபிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள குறித்த நிறுவகத்தின் குறிக்கோள்களாவன.-

(I) குறிக்கோள்கள்

பின்வரும் குறிக்கோள்களின் மூலமாக இலங்கைச் சமூகத்தை மேம்படுத்துவதற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

1.நெறிமுறை சார்ந்த தலைமைத்துவம் மற்றும் நல்லாட்சியை ஊக்குவித்தல்.

2. நிலைபேற்றுத்தன்மையுடைய செயற்திட்டங்களை ஊக்குவித்தல்.

3. ஒருமைப்பாட்டு விழுமியக் கடத்துகையை ஊக்குவித்தல்

4. அறிவு விருத்தியை வழங்குதல்.

5. வழிகாட்டுதலை வழங்குதல்.

6.மனிதவளங்கள்திறன் முகாமை தொடர்பான வேலைத் திட்டப்பட்டறைகளையும் நிகழ்வுகளையும் ஊக்குவித்தல் மற்றும் ஏற்பாடு செய்தல்.

இவ்வமைப்பு ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியில் ஈடுபடாது.

நிறுவகத்தின் குறிக்கோளும் ஏனைய ஏற்பாடுகளும் கூட்டமைப்பின் உறுப்புரைகளில் வழங்கப்பட்டுள்ள அதன் பிரதியொன்றை முன்மொழியப்பட்டுள்ள நிறுவகத்தின் பதிவு செய்யப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். இல. 246, கஸ்பே , பவந்துராகொட, தபால் குறியீடு : 11244, கம்பஹா மாவட்டம், இலங்கை.

இந்த விண்ணப்பம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும்எவரேனும்நபர், நிறுவனம்அல்லது கூட்டுத்தாபனம் இந்த அறிவித்தல் வெளியான திகதியிலிருந்து 21 நாட்களுக்குள் தமது ஆட்சேபனையை பின்வரும் முகவரியில் உள்ள கம்பனிகள் பதிவாளரிடம் சமர்ப்பிக்கலாம் என இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது. "சமாகம் மெதுர", இல.400, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10.

AFA CORPORATE SERVICES (PVT) LTD,
நிறுவனச் செயலாளர்கள்.

இல.14, ஸ்ரீ தர்மகீர்த்தியாராம வீதி,
கொழும்பு 03,
மின்னஞ்சல்: shanilfdfgmail.com

04- 36

---

### ஒன்றிணைப்பு பற்றிய அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் சிமெட் ஹெல்த்கெயார் சேர்வீசஸ் பிரைவெட் லிமிடெட் மற்றும் சிமெட் ஹொஸ்பிடல் சேர்விசஸ் பிரைவெட் லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் ஒன்றிணைப்பு

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 244(3) ஆம் பிரிவின் கீழ் இதனூடாக அறிவிக்கப்படுவது யாதெனில், சிமெட் ஹெல்கெயார் சேர்விசஸ் பிரைவேட் லிமிடெட் ( கம்பனி இலக்கம் PV 2467) மற்றும் சிமெட் ஹொஸ்பிடல் சேர்விசஸ் பிரைவெட் லிமிடெட் ( கம்பனி இலக்கம் PV70074 )ஆகிய நிறுவனங்களின் ஒன்றிணைப்பு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 244(1)(A) இன் கீழ் கம்பனிகள் பதிவாளர் நாயகத்தால் ஒன்றிணைப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 244(2) ஆம் பிரிவின் படி இந்த ஒன்றிணைப்பானது 2026, சனவரி 31 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வருவதுடன் மேற்சொன்ன கம்பனிகள் 2026, சனவரி 31 ஆந் திகதி முதல் சிமெட் ஹெல்த்கெயார் சேர்வீசஸ் பிரைவெட் லிமிடெட் எனும் பெயரில் தொடர்ந்து இயங்கும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

JAAR SECRETARIES (PVT) LTD.
கம்பனிச் செயலாளர்கள்,
சிமெட் ஹெல்கெயார் சேர்விசஸ்
பிரைவேட் லிமிடெட்.

2026, ஏப்பிறல் 02.

04- 95

---

# ஏல விற்பனைகள்

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

1. இசுரு எண்டட்பிரைசார்ஸ் - கணக்கு இல. 0162 1000 0031
2. மஞ்சித்த கன்ஸ்ட்ரக்‌ஷன் அன்ட் இன்ஜினியார்ஸ் கணக்கு இல. 0162 1000 1712

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினால் 2025.06.25ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2026.02.20ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் ( Gazette) 2026.02.25 ஆந் திகதிய திவயின (Divaina) , ஐலண்ட் (Island), தினக்குரல் (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாயில் பதினைந்து